**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 99/2023 |
| Deposition of Witness | : | PW- 2 |
| Name | : | மகாலிங்கம் |
| Father Name | : | சுப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 58 |

**All accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.07.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். நான் கேபின் டிவி ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது வீட்டிற்கு அருகே வசித்து வருகிறார். கடந்த 18.03.2023ம் தேதி நான் மதியம் 01.00 – 01.30 மணியளவில் வீட்டிற்கு சாப்பிட வந்தபோது அ.சா.1ன் வீட்டில் போலீசார் வரைபடம் வரைந்து விபரம் எழுதிகொண்டிருந்தார்கள். நான் அதை படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடன் எனது கவிதாவும் கையொப்பம் செய்தார்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அதிலுள்ள விவரங்கள் சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பார்வை மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2023.07.13 18:30:53 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 99/2023 |
| Deposition of Witness | : | PW- 1 |
| Name | : | சண்முகசுந்தரம் |
| Father Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 43 |

**All accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.07.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஊத்துக்குளி வெள்ளியம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கார்மெண்ட்ஸ் தொழில் செய்து வருகிறேன். எனது வீடு ஊத்துக்குளி வெள்ளியம்பாளையம் லோட்டஸ் அவின்யூவில் உள்ளது. கடந்த 04.03.2023ம் தேதி மாலை 04.00 மணிக்கு நானும் எனது மனைவி அம்பிகாவும் வீட்டை பூட்டிவிட்டு மேட்டுர் அணை அருகே குளத்தூரில் எங்கள் தோட்டத்திற்கு சென்றுவிட்டோம். பின்பு கடந்த 17.03.2023ம் தேதி மாலை 06.00 மணியளவில் மீண்டும் வீட்டிற்கு வந்தபோது எங்களது வீட்டின் இரும்பு கேட்டில் இருந்த பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் பிரதாண மரகதவும் நெம்பி உடைக்கப்பட்டிருந்தது.

2. மேலும் உள்ளே சென்று பார்த்தபோது வீட்டில் இருக்கும் 2 பெட் ரூம்களில் சிறிய பெட் ரூம்பில் இரும்பு பீரோ திறந்திருந்தது. அதில் இருந்த பொருள்கள் கலைந்திருந்தது. அந்த பீரோவில் இருந்த எனது மகளின் வெள்ளி கொலுசு ஒரு ஜோடி, எனது தாயாரின் அரை பவுன் தாலிகொடி, எனது தாயாரின் தலா அரை பவுன் எடையுள்ள இரண்டு மோதிரங்கள் ஆகியவை காணாமல் போயிருந்தது. எனது தாயாரின் நகைகள் களவு போயிருந்ததால் செய்வதறியாது வீட்டில் இருந்தேன்.

3. அன்றைய தினம் இரவு 08.00 மணியளவில் அருகே குடியிருக்கும் லோகநாதன் என்னிடம் வந்து 05.03.2023 ம் தேதி நள்ளிரவு 01.00 மணியளவில் அந்த பகுதியில் நாய் கொலைத்ததாகவும் அப்போது அவர் வெளியே வந்த பார்த்தபோது 4560 என்ற பதிவெண்கொண்ட Suzuki Access வாகனத்தில் 3 பேர் சென்றதாகவும் தான் அந்த வாகனத்தின் பதிவு எண்ணை தெரு விளக்கின் வெளிச்சத்தில் பார்த்து சந்தேகத்தின் பேரில் குறித்து வைத்திருந்ததாக தெரிவித்தார்.

4. நான் மறுநாள் காலை 10.00 –11.00 மணியளவில் நானும் எனது மனைவியும் ஊத்துக்குளி காவல் நிலையம் வந்தோம். புகாரை நான் வீட்டிலே எழுதி எடுத்துசென்றேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. அன்றைய தினம் மதியம் 01.00 மணியளவில் போலீசார் வீட்டிற்கு வந்து வீட்டிலும் கைரேகை சேகரித்து என்னிடமும் மனைவிடமும் கைரேகைகள் பெற்றுசென்றார்கள். பின்பு 23.03.2023 ம் தேதி ஊத்துக்குளி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து எங்கள் வீட்டில் நகையை திருடியவர்கள் கிடைத்துவிட்டதாக தெரிவித்தார்கள். அன்றைய தினம் மாலை வேளையில் நாங்கள் காவல் நிலையம் சென்ற போது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள். **(சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 3 எதிரிகளையும் அடையாளம் காட்டுகிறார்.)**

6. களவு போன நகையை எதிரிகள் உறுக்கி விட்டதாக கூறி ஒரு பவுன் மற்றும் அரை பவுன் எடையுள்ள 2 தங்க காயினை போலீசார் கொடுத்தார்கள். நான் அதை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தங்க காயினை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன் **(அந்த புகைப்படம் மற்றும் இந்திய சாட்சி சட்ட பிரிவு 65(பி) ன் கீழான சான்று அ.சா.ஆ. 2 வரிசையாக ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. எதிரிகள் தரப்பில் வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2023.07.13 18:31:01 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.